මගේ අංකය
எனது இல.
My Number
02/BIS-2023

ඔබේ අංකය
உமது இல.
Your Number

ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන දෙපාර්තමේන්තුව
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
Department of Census and Statistics

දිනය
திகதி
Date
2023.04.24

அன்பான ஐயா/அம்மணி

**இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் மீதான பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான அளவீடு 2023**

கொவிட் 19 பெருந்தொற்றின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் அதிகமான இடருக்குள்ளாகியுள்ளன. தற்போது பெரும்பாலான நிறுவனங்கள் மூலதனம் சக்தி மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துள்ளன. இந்நிறுவனங்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தை இயன்றவரை குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் அரசுக்கு அவசியமாக இருக்கின்றன. அதற்கமைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்குத் தேவையான தகவல்களை வழங்கும் பொறுப்பு இலங்கைக்கான உத்தியோகபூர்வ தரவுகளை வழங்கும் பிரதான அரச நிறுவனமான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

2. எமது திணைக்களத்தினால் இதற்காக அளவீடு ஒன்று திட்டமிடப்பட்டிருக்கின்றது. அவ்வளவீட்டிற்காக உங்களது நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கமைய அளவீட்டு செயற்பாடுகளுக்காக 2023.04.21 தொடக்கம் 2023.05.20 வரையலான காலத்திற்குள் உங்களது நிறுவனத்திற்கு வருகைதரும் எமது உத்தியோகத்தர்களுக்கு தகவல்களை வழங்குவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

3. புள்ளிவிபரவியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும் இத்தகவல்கள் நிறுவன மட்டங்களில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளியிடப்படமாட்டாது என்றும் அவற்றின் இரகசியத்தன்மை திணைக்களத்தினால் பாதுகாக்கப்படும் என்றும் உறுதியளிக்கின்றேன்.

4. அளவீடு தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல் தேவைப்பட்டால் தயவுசெய்து தொலைபேசி இலக்கம் 0112147401 மூலம் கைத்தொழில், நிர்மாண, வர்த்தக மற்றும் சேவைப்பிரிவின் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

5. இந்தத் தேசிய பணிக்கு தரவுகளை வழங்குவதன் மூலம் நீங்கள் தரும் ஒத்துழைப்பைப் பெரிதும் மதிக்கப்படும்

நன்றி

உண்மையுள்ள

பீ.எம்.பீ. அநுரகுமார

பணிப்பாளர் நாயகம்.